**செய்தி வெளியீடு எ ண். 306** **நாள் 6.9.2006**

# மேலும் ஒரு வாக்குறுதி நிறைவேறுகிறது !

## வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகைத் திட்டம்

தி.மு.கழகத் தேர்தல் அறிக்கையிலும், அதனைத் தொடர்ந்து நிதிநிலை அறிக்கையிலும் உறுதியளித்தபடி படிப்பு முடிந்து வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து ஐந்தாண்டுகளுக்குமேல் காத்திருக்கும் எவ்வித வேலைவாய்ப்பும் கிடைக்காத இளைஞர்களின் துயரத்தைத் துடைத்திடும் வகையில், மாதம் ஒன்றுக்கு, எஸ்.எஸ்.எல்.சி. அல்லது பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.150/—; ப்ளஸ் 2 அல்லது மேனிலைக் கல்வியில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.200/—; மற்றும் இளங்கலைப் பட்டதாரி, முதுநிலைப் பட்டதாரிகளுக்கு ரூ.300/—வீதம் மூன்றாண்டு காலத்திற்கு வேலை வாய்ப்பற்றோர் உதவித்தொகை வழங்கும் திட்டம் உத்தமர் காந்தி அடிகள் பிறந்த நாளான அக்டோபர் இரண்டாம் நாளன்று தொடங்கி வைக்கப்படவுள்ளது.

இந்த உதவித்தொகை பெறுவதற்கான தகுதிகள் உள்ளவர்கள் உரிய விண்ணப்பப் படிவத்தினை மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் ஆகிய அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பப் படிவத்தில் உதவித்தொகை பெற தகுதிகள், விண்ணப்பிக்கும் முறை, வருவாய்த்துறை சான்று பெறுதல், வங்கிக் கணக்கு தொடங்குதல் போன்ற அனைத்து விவரங்களும் அடங்கி உள்ளன. உதவித்தொகை பெற விரும்புவோர், வேலைவாய்ப்புத்துறை வழங்கும் அச்சடிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்திலோ அல்லது அதன் ஜெராக்ஸ் நகல் படிவத்திலோ பூர்த்தி செய்து உதவித்தொகையினைப் பெற மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் மனு செய்யலாமெனக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வெளியீடு இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை—9